செ.வெ.எண்:49/ஜூன் நாள் : 20.06.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முதுகுளத்தூர் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் காயமடைந்து இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இன்று (20.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், முதுகுளத்தூர் அருகே 19.06.2016 அன்று அரசு பேருந்து கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரிலிருந்து காக்கூர், திருவரங்கம் வழியாக பரமக்குடி செல்லும் அரசு பேருந்து நேற்று (19.06.2016) காக்கூர் காமராஜபுரம் அருகே சென்ற போது , பின்னால் வந்த இருசக்கர வாகனத்திற்கு வழிவிட முயன்று சாலையோரத்தில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் முதலுதவிக்காக முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு முதலுதவி வழங்கப்பட்டு அதன்பின்பு மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் பரமக்குடி அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று (20.06.2016) இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்று, விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு ஆறுதல் கூறினார். மேலும் காயமடைந்தவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டு விரைவில் குணமடைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.கிருஷ்ணமூர்த்தி உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**